# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2110/40 - 2019 පෙබරවාරි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.02.14

*2110/40 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்***

*32 ஆம் மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழான பணிப்புரை*

*தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்ணாந்து ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தற்போது பதிவு இடைநிறுத்தப்பட்டுள்ள பெட்மின்டன் விளையாட்டு தொடர்பான தேசிய சங்கமான ஸ்ரீ லங்கா பெட்மின்டனின் உத்தியோகபூர்வ தேர்தல் நடாத்தப்படும் வரையில் தற்காலிக செயலொழுங்காக 2018.01.08 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2053/06 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் வாயிலாக நியமனஞ் செய்யப்பட்ட ஆரம்ப இடைக்காலக் கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினரான,*

*1. திரு. ஜீ. ஜீ. மங்கள - பொருளாளர்*

*எனும் உத்தியோகத்தரும் மற்றும் 2018.04.12 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2066/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் வாயிலாக அச்சபையின் இரு உறுப்பினர்களாக நியமனஞ் செய்யப்பட்ட,*

*1. திரு. காரியவசம் கோனபீனுவல கமகே அஞ்சன் மொஹான் விஜேசிங்க - செயலாளர்*

*2. திரு. வசந்த குமார - உப தலைவர்*

*ஆகிய இரண்டு உத்தியோகத்தர்களும் உள்ளடங்கலாக குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் விலகிக் கொண்டதன் காரணமாக வெற்றிடமாகிய 3 பதவிகளின் பொருட்டு கீழ்க்குறிப்பிடப்படும் மூன்று உத்தியோகத்தர்களையும் 2019.02.14 ஆந் திகதியிலிருந்து நியமனஞ் செய்வதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

*1. திரு. லியன ஆராச்சி அப்புஹாமிலாகே தீபால் லியன ஆராச்சி - உப தலைவர்*

*2. திரு. வண்ணிநாயக்க முதியான்சலாகே வசந்த சிசிர வண்ணிநாயக்க - பொருளாளர்*

*3. திரு. மிட்டிமானயே ஜூடித் பிரியானி பெரேரா - செயலாளர்*

அவ்வாறே, ஸ்ரீ லங்கா பெட்மின்டனின் உத்தியோகபூர்வ தேர்தலினை நடாத்துவதன் பொருட்டு 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட பிரமாணங்களுக்கு ஏற்ப பெட்மின்டன் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தினைக் கூட்டி அதன் வாயிலாக தேர்தல் குழுவொன்றினை நியமனஞ் செய்வதற்கும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் இடைக்கால கட்டுப்பாட்டுச் சபையின் வாயிலாக நிகழ்த்துவதற்கும் அதிகாரம் அளிக்கின்றேன்.

ஹரீன் பெர்ணாந்து,
தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு
மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2019, பெப்புருவரி 14.

03-134

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.